ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| **வெளியிடுபவர்** | புள்ளிவிபரத் திணைக்களம் |
| **திகதி** | 2019 மே 15 |

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2019 ஏப்பிறல்

**கொ.மு.சு**

சுட்டெண் பெறுமதி

**41.0**

2019 மார்ச்சுடன் ஒப்பிடுகையில் 25.9 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி


2019 ஏப்பிறலில், தயாரிப்பு நடவடிக்கைகள், 2019 மாச்சிலிருந்து 25.9 சுட்டெண் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் தாழ்ந்த 41.0 சுட்டெண் பெறுமதியினை பதிவுசெய்தது. தயாரிப்பு கொ.மு.சுட்டெண்ணின் வீழ்ச்சிக்கு உணவு, குடிபானம் மற்றும் புகையிலைத் தயாரிப்பு மற்றும் புடவைகள், அணியும் ஆடைகள், தோல் மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கான உற்பத்திகள் என்பனவற்றிற்கான புதிய கட்டளைகளிலும் அவற்றின் உற்பத்தியிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. இவ்வீழ்ச்சிக்கு, ஏப்பிறலில் காணப்பட்ட புத்தாண்டு விடுமுறைகளும் மற்றும் சுமூகமான தொழிற்சாலை தொழிற்பாடுகளைப் பாதித்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஏற்பட்ட பாதுகாப்புக் கரிசனைகளும் காரணங்களாக அமைந்தன. பெரும்பாலான பதிலிறுப்பாளர்கள், குறிப்பாக, புடவை மற்றும் ஆடைத் துறையில் உள்ளவர்கள் பாதுகாப்பு கரிசனைகளின் காரணமாக தொழிற்சாலைகளின் வேலை நேரங்களை கட்டுப்படுத்தவேண்டியவர்களாக இருந்தமையினையும் விரும்பத்தக்க உற்பத்தி மட்டங்களை எய்தமுடியாமல் இருந்தமையினையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

| மாறி | மாச்சு | ஏப்பிறல் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **66.9** | **41.0** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 75.8 | 37.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| உற்பத்தி | 74.2 | 32.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில்நிலை | 57.1 | 43.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| கொள்வனவுகளின் இருப்பு | 64.6 | 41.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | 51.5 | 55.5 | + | விரிவு, உயர்ந்த வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புத்தாண்டு விடுமுறைக்குப் பின்னர் பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் தொடர்ந்தும் பணிக்கு வருகைதராமையின் காரணமாக தொழில்நிலையும் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்திருக்கிறது. புத்தாண்டு பண்டிகைக்காலத்தின் இறுதியில் புதிய கட்டளைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் மூலப்பொருட்கள் முன்னைய மாதத்திலிருந்தே கொண்டுவரப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக கொள்வனவுகளின் இருப்புக்கள் குறைவடைந்தன. நிரம்பலர் வழங்கல் நேரம் உயர்ந்த வீதத்தில் நீடிக்கப்பட்டமைக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் அதிகரித்த பாதுகாப்பு வழிமுறைகள் காரணமாக அமைந்தது.

கொ.மு.சுட்டெண் தயாரிப்பின் நிரம்பலர் வழங்கல் நேரம் நீங்கலாக அனைத்துத் துணைச் சுட்டெண்கள் நடுநிலையான 50.0 மட்டத்திற்குக் குறைவான பெறுமதியினை பதிவுசெய்து 2019 மாச்சுடன் ஒப்பிடுகையில் 2019 ஏப்பிறலில் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த சுருக்கமொன்றுக்கான சமிக்ஞைகளைக் காட்டின.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு:***

***தயாரிப்பு கொ.மு.சு***

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 ஏப்பிறலில் 50.3 பெறுமதியினை பதிவு செய்து 2019 மாச்சிலிருந்து 0.2 சுட்டெண் புள்ளிகள் குறைவடைந்து காணப்பட்டது.

ஐக்கிய இராச்சியம், சீனா, இந்தியா மற்றும் ருசியா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு 2019 ஏப்பிறலில் மெதுவடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்கா, யூரோ வலயம் மற்றும் சிங்கப்பூர் என்பனவற்றில் தயாரிப்பு கொ.மு.சு மேம்பட்டது.

*(மூலம்: மார்க்கிட்,2019 மே 15 இல் உள்ளபடியான)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குனராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**2019 மார்சுடன் ஒப்பிடுகையில் 2019 ஏப்பிறலில் பணிகள் துறை உயர்ந்த வீதத்தில் குறைவடைந்தமைக்கு,** புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள், தொழில்நிலை, வேலைகளின் நிலுவை மற்றும் நடவடிக்கைகளுக்கான ஏதிர்பார்ப்பு ஆகிய ஐந்து துணைச் சுட்டெண்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. அளவீடு ஆரம்பிக்கப்பட்ட காலமான 2015 மே மாதத்திற்குப் பின்னர் பணிகள் துறை கொ.மு.சுட்டெண் நடுநிலையான 50.0 இற்குக் கீழே முதற்தடவையாக பெறுமதியினைப் பதிவுசெய்தமையானது பணிகள் துறையின் ஒட்டுமொத்த வீழ்ச்சியை சமிக்ஞைப்படுத்துவதாக இருந்தது.

புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புக்கள் என்பன வீழ்ச்சியமைந்தமைக்கு உயிர்த்த ஞாயிற்றுத் தாக்குதலும் அதனைத் தொடர்ந்து நாட்டில் நிலவிய நிச்சயமற்ற தன்மையும் காரணங்களாக அமைந்தன. இது, பணிகள் துறையிலுள்ள பெரும்பாலான துணைத் துறைகளில் குறிப்பாக, சுற்றுலா வருகைகளில் பெருமளவிற்குத் தங்கியுள்ள தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபானங்கள், ஏனைய தனியாள் பணிகள் துணைத் துறைகளிலும் மக்களின் நாளாந்த நடவடிக்கைகளில் பெருமளவிற்குத் தங்கியுள்ள மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளிலும் அவதானிக்கப்பட்டது. தீவு முழுவதற்கும் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக வியாபார நேரம் மட்டுப்படுத்தப்பட்டமையும் பயம் காரணமாக அலுவலர்களின் உற்பத்தித்திறன் குறைவடைந்தமையும் வியாபார நடவடிக்கைகள் மோசமடைந்தமைக்கான காரணங்களாக பதிலிறுப்பாளர்களினால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. எனினும், இந்நிலைமை 2019 யூன் அளவில் வழமைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| மாறி | மார்சு | ஏப்பிறல் | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **56.3** | **45.3** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி** |
| | | <u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u> | | |
| புதிய வியாபாரங்கள் | 57.9 | 44.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| வியாபார நடவடிக்கைகள் | 63.5 | 45.1 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| தொழில்நிலை | 51.7 | 47.3 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| நிலுவையிலுள்ள பணிகள் | 48.1 | 45.3 | - | வீழ்ச்சி, உயர்ந்த வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 60.1 | 44.6 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சி |
| | | <u>ஏனைய சுட்டெண்கள்</u> | | |
| விதிக்கப்பட்ட விலைகள் | 56.3 | 53.3 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புக்கள் | 70.5 | 62.6 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புத்தாண்டு தொடர்பில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களின் காரணமாக 2019 ஏப்பிறலில் பணிகள் துறையின் விலை விதிப்புக்கள் மெதுவான வீதத்தில் அதிகரித்தன. பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர் செலவும் 2019 ஏப்பிறலில் எதிர்பார்க்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்கள் நனவாகியதன் காரணமாக மெதுவான வீதத்தில் அதிகரித்தன.


**கொ.மு.சு**

**சுட்டெண் பெறுமதி**

**45.3**

**2019 மார்சுடன் ஒப்பிடுகையில் 11.0 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




***உலக தோற்றப்பாடு:***

***பணிகள் கொ.மு.சு***

உலக பணிகள் கொ.மு.சு 2019 மார்ச்சின் 53.7 இலிருந்து 2019 ஏப்பிறலில் 52.7 இற்கு வீழ்ச்சியடைந்து உலகளாவிய பணிகள் துறையின் வெளியீட்டின் விரிவாக்கத்தின் வீதத்தில் ஏற்பட்ட மெதுவான போக்கினை எடுத்துக்காட்டியது. தற்பொழுது இது 117 மாதங்களுக்கான உலகப் பணிகள் துறையின் வெளியீட்டில் வளர்ச்சியை சமிக்ஞைப்படுத்தியது.

ஜப்பான், சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு 2019 மார்சுடன் ஒப்பிடுகையில் 2019 ஏப்பிறலில் மேம்பட்டது என்பதை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்,2019 மே 14 இல் உள்ளபடியான)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு>50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு<50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள்நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.